1973 மார்ச் 9]

தோறும் ரூ. 1,000 மானியமாக வழங்கப்படுகிறது. அவர்களைப் போல் இந்தப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ. 1,000 கொடுத்து உதவ அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் மூலக் கேள்விக்கே விடை அளிக்கும்போது குறிப்பிட்டேன், பல்கலைக் கழகம்தான் உதவி செய்யவேண்டும் என்று. நாம் மொத்தமாக பல்கலைக் கழகத்திற்கு உதவித் தொகை தருகிறோம். இப்படிப் பட்ட பிரச்சினைகளில் முடிவெடுக்கவேண்டியது பல்கலைக் கழகம். அந்த மாணவர்கள் பல்கலைக் கழக துணைவேந்தருக்கு விண்ணப்பம் செய்து அவர்களுடைய கோரிக்கைகளை நிறை வேற்றிக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education the number of students carrying on research work in the University of Madras in different branches of learning?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எவ்வளவு பேர்கள் ஆராய்ச்சித் துறையிலே ஈடுபட்டி ருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் இல்லை. தனிக் கேள்விப் போட்டால் புள்ளிவிவரம் கூறலாம். எம்.ஏ., எம்.எஸ்ஸி. முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பில் தேறியவர்கள் எம்.லிட்., பி.ஹெச்டி. படிப்பதற்கு, ஆராய்ச்சி செய்வதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள். முதல் ஆண்டிலே அவர்களுக்கு உதவித் தொகை ஏற்கனவே 200 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது, இப்பொழுது 250 ரூபாய் என்ற அளவிற்கு ஒவ்வொரு மாணவருக்கும் கொடுக் கப்படுகிறது. இரண்டாவது ஆண்டுக்கு பேராசிரியரின் சிபாரிசின் பேரில் வழங்கப்படுகிறது. பி.ஹெச்டி. மாணவர் களுக்கு மூன்றாவது ஆண்டுக்கும் வழங்கப்படுகிறது.

மூலக்கொத்தளம் பேருந்து நிலையம்

*** 299 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட சென்னையில் உள்ள மூலக்கொத்தளம் வெளியூர்ப் பேருந்து நிலையத்தினைச் சீர்படுத்திக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, மூலக் கொத்தளத்தில் அமைந்திருக்கிற பேருந்து நிலையத்திலிருந்து நூற்றுக்கணக்கான பேருந்துகள் வட செங்கற்பட்டுக்கும் திருத்தணி வட்டத்திற்கும் தினந்தோறும் சென்றுகொண்டிருக்கின்றன. அங்கே பக்கிங்ஹாம் கால்வாய் இருப்பதால் அந்தப் பகுதி அசுத்தமாக இருக்கிறது. ஆகவே அந்தப் பேருந்து நிலையத்தை வேறு இடத்திலே அமைக்க ஒரு சிறப்புத் திட்டம் அரசாங்கம் கொண்டுவர முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த இடத்திலே பேருந்து நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இல்லை என்று குறிப்பிட்டேன். சென்னை மாநகராட்சி மன்றம் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. திட்டம் போடப்பட்டு அதற்குப் பிறகுதான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. எ. வகாப் : இதுபோன்று பிராட்வேயிலே பேருந்து நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டதற்கு முன்னாலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது மாநகராட்சியிடம் அதைப்பற்றி செயற்குறிப்பு இருப்பதாகக் கூறினார்கள். பல ஆண்டுகளாக முயற்சியெடுக்கப்படுகின்ற நிலையிலேயே இருக்கின்றது. சென்னையிலே உள்ள பஸ் ஸ்டாண்டுகள் எல்லாம் சுகாதாரக்கேடுள்ள நிலையிலும் அருவருக்கத்தக்க முறையிலும் இருப்பதால் அதைப் போக்கி நல்லமுறையிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சி மன்றம் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. பேருந்து நிலையங்கள் அமைப்பதிலே இருக்கக்கூடிய சங்கடம் என்னவென்றால், அவற்றை அமைப்பதற்கான இடவசதிகள் சைனா பஜாரிலோ அல்லது வ. உ. சி. நகரிலோ கிடைக்காத நிலைமை இருக்கிறது. சென்னை நகரத்திற்கு அப்பால் வேண்டுமானால் இடத்தைப் பெறமுடியும். எந்த இடத்தைப்பெறலாம் என்பதிலே முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பிராட்வே பற்றி இப்பொழுது விவரம் இல்லை. தனிக்கேள்விபோட்டால் பதில் சொல்லலாம். மாநகராட்சி மன்றம் இதுபற்றி நடவடிக்கை எந்த அளவில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து சொல்லலாம்.

1973 மார்ச் 9]

திரு. கே. எ. வகாப் : போதிய இடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது அந்த பஸ் ஸ்டாண்டிற்கு அருகிலேயே சென்னையிலே மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த இடத்தை சும்மா வைத்திருக்கிறார்கள். எந்தவிதமான கன்ஸ்ட்ரக்ஷனும் செய்யவில்லை என்று சொல்லி அந்த இடத்திலே அதை அமைப்பதற்கு மத்திய அரசினிடத்தில் அனுமதிபெற அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசாங்கம் அந்த இடத்தைத் தருவதற்கு இல்லை என்று சொல்லி விட்டார்கள். வேறு பல காரியங்களுக்காக அந்த இடத்தைக் கேட்டபொழுது இல்லையென்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள்.

வெளியூர்களில் கேளிக்கை நடனங்கள்.

*300 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளியூர்களில் உள்ள உணவு விடுதிகளில் இரவு கேளிக்கை நடனங்கள் நடத்த அரசு அனுமதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : சென்னை போன்ற நகரங்களிலே கேளிக்கை நடனங்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவது போல் கோவை போன்ற பெரிய நகரங்களிலும் அனுமதியளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கு உரிமம் வழங்குகிற பொறுப்பு அரசினிடத்திலே இல்லை. கேளிக்கை நடனங்கள், உணவகங்கள் இவற்றை நடத்துவதற்கு அந்த அந்த நகராட்சிகள்தான் அனுமதியளிக்கவேண்டும். உரிமம் வழங்குகின்ற அதிகாரி அங்கங்கேயுள்ள காவல் துறை டெபுடி சூப்பிரண்டெண்டண்ட் அவர்களைக் கலந்துகொள்ள வேண்டும் என்று இருக்கிறது. 1888 ஆம் ஆண்டு மாநகராட்சி காவலர் சட்டத்தின்